தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1979 அக்டோபர் 31

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மதுரை பொதுப்பணித்துறை பயணியர் இல்லம்

* வினா 41—திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை சர்க்யூட் அவுஸ் (Circuit House) விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை அறைகள் கூடுதலாகக் கட்டப்பட இருக்கின்றன?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) ஆம்.

(ஆ) நான்கு அறைகள் கூடுதலாகக் கட்டப்பட இருக் கின்றன.

திரு. என். லட்சுமிநாராயணன்: மதுரை நகரில் வேறு தங்கும் விடுதிகளை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அந்த அறைகளில் ஏ.சி. வசதி, ஃபோன் வசதிகள் எல்லாம் செய்து தரப்படுமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): ஏ. சி. வசதி கிடையாது. ஃபோன் வசதிகள் செய்து தருவதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும். மதுரை சுற்றுலா மாளிகையை விரிவாக்கும் பொருட்டு அரசாணை எண். 668, பொதுப்பணித் துறை, நாள் 30-5-78-ல் ரூ. 2.50 இலட்சம் ஒப்புதல் அளிக்கப் பட்டது. மொத்தம் நான்கு அறைகள் கட்டப்படுவதாக இருக்கிறது. இரண்டு அறைகள் தரை மட்டத்திலும், மற்ற இரண்டு அறைகள் முதல் மாடியிலும் கட்டப்படும். முதல் மாடியில் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வைகாசி இல்லத்தில் இரண்டு படுக்கைகள் அடங்கிய ஒரு சூட் அதிகமாகக் கட்டப்படும்.